செ.வெ.எண்: 13/மே நாள்: 05.05.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (Voters Booth Slip) வழங்கும் பணிகள்**

**மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர்**
**முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள்**

**வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு வழங்கி துவக்கி வைத்தார்.**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இளங்கோவடிகள் தெரு பகுதியில் இன்று (05.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள், வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (Voters Booth Slip) வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற மே 16 அன்று சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மாவட்டத்தில் உள்ள மொத்தம் 4 சட்டமன்ற தொகுதிகளில், பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 1,22,050 ஆண் வாக்காளர்களும், 1,23,429 பெண் வாக்காளர்களும், 19 இதர வாக்காளர்களும், 480 பணித்தொகுதி வாக்காளர்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதியில் 1,37,440 ஆண் வாக்காளர்களும், 1,35,985 பெண் வாக்காளர்களும், 28 இதர வாக்காளர்களும், 191 பணித்தொகுதி வாக்காளர்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 1,41,900 ஆண் வாக்காளர்களும், 1,42,412 பெண் வாக்காளர்களும், 18 இதர வாக்காளர்களும், 72 பணித்தொகுதி வாக்காளர்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1,49,225 ஆண் வாக்காளர்களும், 1,47,680 பெண் வாக்காளர்களும், 8 இதர வாக்காளர்களும், 481 பணித்தொகுதி வாக்காளர்களும் ஆக மொத்தம் மாவட்டத்தில் 5,50,615 ஆண் வாக்காளர்களும், 5,49,506 பெண் வாக்காளர்களும், 73 இதர வாக்காளர்களும், 1,224 பணித்தொகுதி வாக்காளர்கள் உள்பட மொத்தம் 11,01,418 வாக்காளர்கள் உள்ளனர்.

மாவட்டத்தில் தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள், வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி சீட்டு (Voters Booth Slip) வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (Booth level Officer) மூலமாக அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்குச்சாவடி சீட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின்போது இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (வருவாய் கோட்டாட்சியர்) திரு.ராம்பிரதீபன், வட்டாட்சியர் திரு.மாரி, மண்டல துணை வட்டாட்சியர் திரு.பழனிக்குமார், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் திருமதி.பிரேமா, திருமதி.ஜோதி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**